★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 ஆனி: 15 ஷஃபா: 3 இதழ்: 137
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29-6-79

நயினை நாகபூசணி
அம்பிகை அடியார்களே!

5-ம் திருவிழாவாகிய இன்றிலிருந்து அம்பிகை அடியார்களின் வசதிக்காக எமது காட்சியறையை அங்கு அமைத்துள்ளோம். அங்கு தொலைக்காட்சிப் பெட்டிகள், காது கேட்கும் கருவிகள் யாவற்றையும் பார்த்து ஆடர் செய்துகொள்ளலாம். மற்றும் ஆடம்பரப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

கிருபா கிவ்ற் கவுஸ்
46, பெரியகடை – யாழ்ப்பாணம்
அம்மன்கோவிலடி, நயினாதீவு

## ஈழவேந்தன் தற்காலிக வேலைநீக்கம்

(கொழும்பு)

இலங்கை மத்தியவங்கி ஊழியரான திரு. மா. கனகேந்திரன் ["ஈழவேந்தன்"] சேவையிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

இலங்கைத் தேசியக் கொடியை அவமதித்தது, அரசியல் அமைப்புக்கு மாறாகச் செயல்பட்டது, யாத்திரை செல்வதாகச் சென்று அலகபாத் இந்து மத மாநாட்டில் கலந்து கொண்டது, இன, மத ஐக்கியத்துக்கு மாறாக உணர்ச்சியைத் தூண்டும் முறையில் நடந்துகொண்டது முதலிய குற்றச் சாட்டுக்களை மத்திய வங்கி நிர்வாகம் திரு கனகேந்திரன்மீது சுமத்தி விளக்கம் கேட்டிருந்தது. இவற்றுக்கு அவர் அளித்த பதில் திருப்தியில்லையென்று கூறி இம்மாதம் 26ம் தேதி முதல் அவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# யாழ். டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களா?

## மரணவிசாரணை அதிகாரிமீது என்ன நடவடிக்கை?

### ஆஸ்பத்திரி-பொலிசார் கடிதத் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் 27ந் திகதி புதன்கிழமை நடந்த சம்பவங்கள், அதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி பற்றி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்தி சம்பந்தமாக இரண்டு சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருக்கின்றன.

புதன்கிழமை காலை யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களா? என்பது முதல் பிரச்னை. டாக்டர்களின் வேலைநிறுத்த மிரட்டலுக்குக் காரணமாயிருந்த யாழ். நகர திடீர் மரணவிசாரணை அதிகாரியும் பதில் நீதவானுமான திரு. எஸ். பிரான்சிஸ் கைதுசெய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டாரா? அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றியதாகும்.

இந்தப்பிரச்னைகள் சம்பந்தமாக யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர், யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர், யாழ். தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோருக்கிடையில் அன்று நடைபெற்ற கடிதத் தொடர்புகள் இவற்றைத் தெளிவு படுத்துகின்றன. அவை இங்கு விபரமாகத் தரப்படுகின்றன. (ஆசிரியர் குறிப்பு—அன்று டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களா? இல்லையா? பின்வரும் கடிதத் தொடர்புகள் விஷயத்தை தெளிவு படுத்திய போதிலும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுவதற்கு அன்று வெளியிடங்களிலிருந்தும் நகரிலிருந்தும் வந்த நோயாளிகளும் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கும் நோயாளிகளும் நன்பகல் பரிசோதிக்கப்படவில்லை; கவனிக்கப்படவில்லை; இதனால் நோயாளிகள் அவதிக்குள்ளானார்கள் என்பது மட்டும் உண்மை)

#### பொலிஸ் அத்தியட்சகர் கடிதம்

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு எம் ஈ பீ எல் பெரேரா யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகருக்கு நேற்று முன்தினம் (27ம் திகதி) அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது;

"டாக்டர் சின்னத்துரை சுந்தரநாதனின் முறைப்பாடு குறித்து இன்றுகாலை 9-10 மணியளவில் நீங்கள் தொலைபேசியில் என்னுடன் தொடர்புகொண்டது சம்பந்தமாக தெரிவிப்பதாவது:

"மேற்படி முறைப்பாடு குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் தமது விசாரணைகளை முடித்துக்கொண்டுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## நினைவாலயத்துக்கு முதல் மாத சம்பளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினரான திரு. குமாரவேலு, தமது முதல் மாதச் சம்பளம் 511 ரூபாவையும் செல்வா நினைவாலயத்துக்கென, செல்வா அறங்காவல் குழுச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தத்திடம் நேற்று ஒப்படைத்தார்.



கைதடி சைவச்சிறுவர்கள் இல்ல வளர்ச்சி நிதிக்காக நாளை மாலை வீரசிங்க மண்டபத்தில் பரதநாட்டிய நிகழ்ச்சியினை அளிக்கும் குமாரி ஜெயகௌரி நகுலேந்திரனின் ஒரு அபிநயத்தோற்றம். யாழ். மாநகரசபை முதல்வர் திரு. ஆர் விசுவநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். நட்டுவாங்கம்: சென்னை நுண்கலைக் கல்லூரி அத்தியட்சகர் "பரதசூடாமணி" அடையாறு ஸ்ரீ கே. லக்ஷ்மண்.

## சிறுமி கடத்தப்பட்டு 'ஜிப்சி' கொள்ளை

(யாழ்ப்பாணம்)

"ஜிப்சி" அணிந்து தம்பியாருடன், பாடசாலை சென்ற 8 வயது சிறுமியை பட்டப் பகலில் பலாத்காரமாக இளைஞர் ஒருவர் சைக்கிளில் கடத்திச் சென்று 'ஜிப்சியை' கொள்ளையடித்த சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

நண்பகல் சாப்பாட்டிற்காக பாடசாலையிலிருந்து 8 வயது சிறுமியான அன்னுமலை மங்களேஸ்வரியும், தம்பியும் சென்று கொண்டிருந்தபோதே இச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

சைக்கிளில் வந்த இளைஞர் சிறுமியிடம் உமது அப்பாவை எனக்குத் தெரியும் அவர் இப்போ எங்கு இருக்கிறார் என்று கேட்டதாகவும், "அப்பா ஆஸ்பத்திரியிலிருப்பதாகவும், இதைத் தொடர்ந்து அந்த இளைஞர் அப்பாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வரும்படி அச்சிறுமியை பலவந்தமாக சைக்கிள் பாரில் ஏற்றி ஒருகையால் வாயைப் பொத்திக் கொண்டு சிறுமியைக் கடத்திச் சென்றதாவும் கூறப்படுகிறது.

ஐயனார்கோவிலடியில் சிறுமியின் இரு ஜிப்பிகளையும் கழற்றிவிட்டு சிறுமியை மீண்டும் தட்டாதெருச் சந்திக்கருகில் இறக்கி விட்டதாகவும்

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பில் ஆரம்பமாகும் இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாடு

(கொழும்பு)

நான்காவது சர்வதேச இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாடு இன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

இன்று மாலை 3-45 மணிக்கு ஆரம்பமாகும் இம்மகாநாட்டை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைப்பார், தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டதும் 'கிராஅத்' ஓதலுடன் மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இம்மகாநாட்டில் பங்குபற்றும்பொருட்டுத் தமிழகத்திலிருந்து பல அமைச்சர்களும், அறிஞர்களும், உயர்அதிகாரிகளும் விமானமூலமும், கப்பல் மார்க்கமாகவும் தலைநகருக்கு வந்துசேர்ந்தவண்ணமிருக்கின்றனர்.

இவ்வைபவத்தில் 1500க்கும் அதிகமான இலங்கை—இந்திய அறிஞர்களும், மதத்தலைவர்களும், நீதியரசர்களும் அமைச்சர்களும், பாராளுமன்றஉறுப்பினர்களும், வெளிநாட்டுத் தூதுவர்களும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பிக்கவுள்ளனர். சபாநாயகர் அல்ஹாஜ் எம் ஏ பாக்கீர் மாக்கார் வரவேற்புரை நிகழ்த்துவார் அதனைத்தொடர்ந்து ஜனாதிபதி அவர்களின் உரையும் மகாநாட்டிற்கு வந்துள்ள [illegible] களை ஜனாப் ஏ எம் [illegible] ப்தீனும மகாநாட்டு அறிக்கையை கலாநிதி அல்ஹாஜ் எம் எம் உவைஸும் வாசிப்பர். பின்னர் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச் முஹம்மது, கல்வி அமைச்சர் திரு நிஜுசிஸ விஜயரத்தின, தமிழக கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஜனாப் ஜே ராஜா முகம்மது, தமிழக கல்வி அமைச்சர் திரு செ அரங்கநாயகம் ஆகியோர் உரையாற்றுவர்.

இதற்கு முன்னர் சென்னையிலும், திருச்சியிலும், காயல் பட்டணத்திலும் நடைபெற்ற முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகளைவிட இம்மகாநாடு அதி [illegible]

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் தரம் 11

வசிப்பிடத்தகைமை:- குறைந்தது இரண்டு வருடமாவது யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வயது.- 23 — 40

சம்பளம்:- $\frac{400 — 650}{15 \times 10 + 20 \times 5}$

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு அங்கீகரிக்கும் படிகளும் வழங்கப்படும்

விண்ணப்ப முடிவுத் திகதி:- 14-7-79

தராதரம் பற்றிய விபரங்கள், விண்ணப்பப்படிவங்கள் சங்கத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். கடிதமூலம் பெறுவதாயின் சொந்த முகவரியிட்டு முத்திரையொட்டிய கடித உறை அனுப்பவேண்டும்.

தலைவர்.

சாவகச்சேரி,
25-6-79.

2898



சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

## லொறிச்சாரதி தேவை

லொறிச்சாரதி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வசிப்பிடத்தகைமை:- குறைந்தது இரண்டு வருடமாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வயது;- 20 — 35

கல்வி: 8-ம் வகுப்புச் சித்தி

அனுபவம் - ஐந்து வருடத்திற்கு மேல் லொறிச் சாரதியாகக் கடமையாற்றியிருக்கவேண்டும்

சம்பளம்:- சம்பள நிர்ணயசபை விதிக்கும் சம்பளம்

விண்ணப்ப முடிவுத் திகதி:- 14-7-79

விண்ணப்பங்கள் சங்கத்தினால் கொடுக்கப்படும் படிவத்தில் கல்வி, பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்நாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

சாவகச்சேரி,
25-6-79.

2899



வடபிராந்திய
போக்குவரத்துச் சபையின்

## ஏலவிற்பனை

பஸ் வண்டிகள், ஆகியன

மேற்படி ஏலவிற்பனை எதிர்வரும் 13-07-79 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் கோண்டாவில் சாலையில் நடைபெறும்.

ஏல விற்பனைக்குரிய பொருட்களின் விபரம்:

பஸ் வண்டிகள் — லேலண்ட் வொயட் — 30
ரெக்கர் — — 01

பாவித்த டயர், ரியூப், ரியூப் பட்டிகள், றிம்கள் ஆசனச் சட்டங்கள், கிளச் பிளேட், பிரேக் டிறம் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள்

இவற்றைப் பார்வையிட விரும்புவோர் பலாலி வீதியிலுள்ள கோண்டாவில் சாலையில் வேலை நாட்களில் வேலை நேரங்களில் 79-07-09 முதல் நேரடியாகப் பார்வையிடலாம். மேற்படி பொருட்களை ஏலத்தில் பெற்றுக்கொள்பவர் பெறுமதியில் 25% பணத்தை உடன் செலுத்தி மிகுதி 75% பணத்தை 3 நாட்களுக்குள் செலுத்தி இதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் இல: 165, 4-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள வட பிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைமைக் காரியாலய விநியோக உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
ஏல விற்பனை,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
165, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

2890


## 22 கிளைகளுக்கு போட்டியின்றித் தெரிவு

[புலோலி]

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைக் குழுத் தேர்தல்களுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது 25 கிளைகளைக் கொண்ட இப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் 22 கிளைகளுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். [கு]


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு / 1138

1. பொன்னையா கார்த்திகேயனும், பெண்
2. பவானி

பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். வழக்காளிகள்

எதிராக

1. மாதர் சுப்பிரமணியமும், பெண்
2. செல்லம்மா

மாவிட்டபுரம், சாயுடை

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1979ம் ஆண்டு ஆடி மாதம் 25ம் திகதி (25-7-1979) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 1266 சதம் 66ம். மேலும் 1000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976ம் ஆண்டு பங்குனி மாதம் 29ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976ம் ஆண்டு ஆடி மாதம் 9ந் திகதி வரையுமான வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 337/15 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை "சாயுடை" பர நில. இலா. 8 $\frac{3}{4}$ இதில் கிழக்குப் பக்கமாக பரப்புநில இலாச்சம் மூன்றுகுளி பதினைன்றேகால் (பர நில. இலா. 3 குளி $11\frac{1}{4}$) வான்பயிர்களும், இந்தப் பரப்பு மூன்று குளி பதினைன்றேகாலுக்கும் எல்லை கிழக்கு கதிரிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் ஆதனம். வடக்கு புதிதாக வைக்கப்பட்ட பத்து அடி அகலம் கொண்ட ஒழுங்கை மேற்கு கதிர்காமு கந்தையாவின் மிகுதியாதனம், தெற்கு சுப்பர் முத்தம்பியின் ஆதனம். இதடங்கலும் இன்னும் வடக்கேயிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் குறித்த புதிதாக வைக்கப்பட்ட பத்தடி ஒழுங்கையின் வடக்கெல்லையான பொன்னையா நடராசாவின் காணியால் வழமையான வழிவாய்க்காலும் இன்னும் கிழக்குப் பேர் ஒழுங்கையிலிருந்து கிழக்கெல்லைக் காணியின் வடக்கு எல்லையோரமாக இக்காணிக்குவரும் மூன்றுமுழ அகலப் பாதையுரித்தும். (முற்பதிவு ஏ. 343/2)

சி. ஆ. த. வடிவேலு J. P.,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்",
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
6-6-1979.

2896



## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு/62.

பொன்னையா மகிணன்,
பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
வழக்காளி

எதிராக

இல: 1/20, 2-ம் ஒழுங்கை, பலாலி றோட்,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

1. இரத்தினம் நித்தியானந்தராசாவும் பெண்
2. விஜயலெட்சுமியும்

எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/62ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1979ம் ஆண்டு ஆடி மாதம் 24ம் திகதி (1979-7-24) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 2545 சதம் 33ம் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வட்டிவீதம் வழக்கு அணைத்ததிகதியாகிய 1976ம் ஆண்டு சித்திரை மாதம் 1-ந் திகதியிலிருந்து முழுத்தொகையும் இறுக்கப்படும் வரையும் 24 வீத வட்டியுடன் கொடுத்து வழக்குச் செலவு ரூபா 496 சதம் 80 கொடுக்க வேண்டும். இதில் வட்டிப் பணத்தில் ரூபா 400/- கழித்து.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிலுற "மாணிக்கன் காடு" நில பர.0 குளி 14,1/16 இது உத்தரவு பெற்ற நில அளவைக்காரன் ரி. கந்தையா 29-9-66ல் அளந்து விபரித்த 3008ம் இலக்கப் படத்தில் 3ம் துண்டு இந்த நிலப்பரப்பு சைவர் குளி பதினாலும் பத்தில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு நல்லதம்பி செல்லையாவினுதனம், மேற்கு வயிரவர் கோவிலினுதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும் (முற்பதிவு டி 336/200)

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்",
காங்கேசன் துறை வீதி,
கோண்டாவில்.
31-5-79.

2895



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆனையிறவு உப்பளத்திற்கு அருகாமையில் கண்டி, யாழ்ப்பாணம் பிரதான வீதி அருகில், கல்வீடும் கிணற்றுடன் $3\frac{1}{4}$ ஏக்கர் வயல்நிலமும் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு: V. S துரைரெத்தினம், 18, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். .2882

திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் பலாலி றோட்டிலிருந்து இருநூறு யார் உள்பக்கமாக எந்த பயிர்ச்செய்கைக்கும், வீடு கட்டுவதற்கும் உகந்த நாலுபரப்புக் காணி கிணற்றுப்பங்குடனோ இல்லாமலோ உடன் விற்பனைக்குண்டு பரப்பு இருபதினாயிரத்துக்கு கிட்டிய தொகைக்குக் கொடுக்கப்படும். விபரங்கட்கு: நாதன் மியூசிக்கல் ஸ்ரோர்ஸ், முனீஸ்வரம் வீதி, யாழ்ப்பாணம். 2902



## சீமெந்து விநியோகம்

சீமெந்து பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் தபால்மூலம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் கிடைத்து 04 வாரங்களுக்குள் பாவனையாளர்களுக்கு சீமெந்து விநியோகிக்கும் திகதி அறிவிக்கப்படும்

தொழிற்சாலை
முகாமையாளர்
2877


## கன்பொல்லையில் 80 பேருக்கு காணி

[புலோலி]

யாழ். மாவட்டத்தில் மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்ட உடுப்பிட்டி கன்பொல்லை மாதிரிக் கிராமத்தில் காணி பெறுவதற்குக் கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதியான 80 பேருக்கு தேசிய வீடமைப்புத்திணைக்கள யாழ் மாவட்ட சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. எஸ் இராமலிங்கம் உத்தியோகபூர்வமாக காணி உறுதிகளைக் கையளித்துள்ளார்.

இங்கு காணி பெற்றுள்ள சகலருக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கென அரசாங்கம் 9,000 ரூபா பெறுமதியான கட்டிடப் பொருட்களை வழங்கவுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் வை வேலும்மயிலும் தெரிவித்தார். (கு)

## தொண்டமானாறில் உல்லாசப்பயண விடுதி

[உடுப்பிட்டி]

யாழ் மாவட்டத்தில் இயற்கை அழகும் வனப்பும் மிக்க அழகிய கடற்கரையைக் கொண்டுள்ள தொண்டமனாறு முகத்துவாரத்தில் நவீன வசதிகளைக் கொண்ட உல்லாசப்பிரயாணிகள் விடுதி ஒன்று நிறுவப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை இவ்வுல்லாசப் பிரயாணிகள் விடுதியை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது

தொண்டமானாறு பகுதிக்கு உல்லாசப்பிரயாணிகள் பெருமளவில் வருவதாலும், இங்குள்ள அழகிய கடற்கரையும் இயற்கைக்காட்சிகளும் வெகுவாகக் கவர்ந்திழுப்பதாலும் இங்கு உல்லாசப்பிரயாணிகள் விடுதியை அமைப்பதன் மூலம் வல்வை நகரசபைக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**வடபகுதி வங்கிக் கொள்ளை பணம்**

# தமிழர்கூட்டணி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது

## பொலிஸ் அதிபர் செனிவரத்ன சாட்சியம்

(கண்டி)
"வடபகுதிவங்கிகளிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் தமிழர்விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்தப்பட்டது."

இவ்வாறு பொலிஸ் அதிபர் திரு ஏ. எஸ் செனிவரத்ன சன்சோனிக்கமிஷன் விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் கூறினர்.

ஆகஸ்ட் 77 இனக்கலவரத்தின்போது யாழ் பொலிஸ் அதிபராகக் கடமையாற்றிய திரு செனிவரத்ன தற்போது களுத்துறையில் கடமையாற்றுகிறார்.

கண்டியில் நடைபெற்று வரும் விசாரணையின்போது சாட்சியை சட்டத்தரணி திரு கே. எஸ் சண்முகலிங்கம் குறுக்குவிசாரணைசெய்தார்

சாட்சிமேலும் கூறுகையில், தமிழர் விடுதலைக்கூட்டணி நடவடிக்கைகளுக்கு வங்கிக் கொள்ளைப் பணம் பயன்படுத்தப்படுகின்றதுஎன்ற முடிவுக்கு நான் வருவதற்கு காரணமாக இருந்த தகவல்களை எனக்குத் தந்தவர்களின் பெயர்களை அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றகாரணத்தினல் நான் இங்கு கூறவிரும்பவில்லை

சட்: இது ஒரு முக்கியமான விடயம். இது குறித்து இக் கமிஷன் விசாரணை செய்ய வேண்டும். நீர் கூறுவது உண்மைதானு?

சாட்சி: நான் கூறுவது முற்றிலும் உண்மை. தமிழர் விடுதலைக்கூட்டணி நடவடிக்கைகளுக்காகவே வங்கிகளில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இது உண்மையே.

# தமிழ் ஈழக் கோரிக்கை கைவிடப் படவேண்டும்

## கமிஷனர் சன்சோனி கருத்து

(கண்டி)
தமிழ் ஈழக் கோரிக்கைக்கு இந்த நாட்டு மக்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். நான் விளங்கிக்கொள்வதிலிருந்து தனிநாட்டுக் கோரிக்கை கைவிடப்பட வேண்டும் என்றே கருதுகிறேன்'

இவ்வாறு ஆகஸ்ட் வன்செயல்களை விசாரித்து வரும் கமிஷனர் திரு எம் சி. சன்சோனி குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் கண்டியில் விசாரணைகள் நடைபெற்றபோது முன்னள் யாழ் பொலிஸ் அதிபர் திரு. செனிவரத்ன சாட்சியமளிக்கையில் அவரைக் குறுக்கு விசாரணை செய்த சட்டத்தரணி திரு. கே. சண்முகலிங்கம் தெரிவித்த கருத்துக் குறித்து கமிஷனர் பிரஸ்தாபிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

கமிஷனர் தெரிவித்ததாவது: நான் விளங்கும் வகையில் இந்தக் கோரிக்கையால் எந்த வித நன்மையும் கிடைக்காது! அது சாத்தியமானவை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை

தமிழ் ஈழகோரிக்கையால் இறுதியில் எதுவித லாபமும் கிடைக்காது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளை வட்டமேசை மாநாட்டின் மூலம் தீர்க்கலாம் என ஒப்புக்கொண்டுள்ளார்.

தமிழ் ஈழக்கோரிக்கை வட்டமேசை மாநாட்டுக்கு முரணனதாகும்.

தனிநாட்டுக் கோரிக்கையும், அது தொடர்பாக நடந்து வரும் வன்செயல்களும் பூரணமாக ஒழிக்கப்பட வேண்டும்.' (ஞ)

## தமிழ் பொலிசாருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும்தொடர்பு இருப்பதாக நான் கூறவில்லை

### அனுதாபிகள் இருக்கலாம் என கூறியிருப்பேன் என்கிருர் எஸ். பி.

(கண்டி)
'இனக்கல[illegible]தின் போது யாழ் திரு[illegible]கதின் தமிழர் வி[illegible]தலை கூட்டணியினரின் தனிநாடு பிரிவினைக் கோஷமே கலவரத்துக்கு காரணம் என [illegible] பிராயப்பட்டனர்'

இவ்வாறு முன்னள் யாழ் பொலிஸ் அதிபர் திரு ஏ, செனிவரத்ன நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற சன்சோனிக் கமிஷன் விசாரணையின் போது தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறினர் அவர் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது!

1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் திகதி நான் பலாலி விமான நிலையத்திற்கும் அரசாங்க செயலகத்தில் இடம் பெற்ற மாநாட்டுக்கும் சென்ற பொழுது பொது மக்கள் எவரையும் பொலிசார் தாக்கிய சம்பவம் எதனையும் நான் காணவில்லை. பொலிசார் எவரும் வெறுமனே கடமை எதுவும் இன்றி நகரில் திரிந்தமையையும் நான் காணவில்லை

ஆகஸ்ட் 18-ம் திகதி நாக[illegible]ரைக்கு சிங்கள அகதிகள் விடயம் தொடர்பாக நான் சென்றேன். நாகவிகாரைச் சந்தியில் பொதுமக்களை பொலிசார் தாக்கவில்லை அவ்வாறு தாக்கியதாகவும் என்னிடம் யாரும் புகார் செய்யவில்லை

ஆகஸ்ட் 19-ம் திகதி எம். பீக்கள் சிலரை துரையப்பா விளையாட்டரங்கில் இருந்த சில பொலிசார் கூச்சலிட்டு கேலி செய்ததாக என்னிடம் முறையிட்ட பொழுது அது தொடர்பாக விசாரணை செய்தேன். பொலிசார் கூச்சலிட்டனர் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் எதுவும் இருக்கவில்லை.

கமிஷனர்: கூச்சலிட்டுக் கேலி செய்யும் போது கண்ணீர்ப்புகை அடித்துத் தடுக்க முடியாதா?

சட்டத்தரணி சண்: தனது ஆட்களுக்கு எதிராக அவர்கள் கண்ணீர்புகை அடிக்க மாட்டார்கள்

சாட்சி: "மௌனம்"

தமிழ் பொலிசாருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் தொடர்பு இருப்பதாக நான் எனது சாட்சியத்தில் கூறவில்லை.. யாராவது அனுதாபிகள் இருக்கலாம் என்று சொல்லியிருப்பேன்,
6-ம் பக்கம்பார்க்க]

# மக்கள் கருத்து

## இப்பாடசாலை அதிபர்—ஆசிரியர்கள் காட்டுமிராண்டிகளல்ல

8-06-1979ம் திகதிய கொழும்புத் தினசரி ஒன்றில் "ஆலயத்திற்கு மாணவர்களைக் கூட்டிச் சென்று சாதிப் பாகுபாடு காட்டுவதா?" என்னுந் தலையங்கம் "கண்ணியம் மிகுந்த ஆசிரியர்களில் காட்டுமிராண்டிகளா?" எனத் தலைப்பிட்டுத் திருக்குறள் முன்னணிக்கழகப் பொதுச் செயலாளர் திரு வண்ணை ஆனந்தன் வடமாநிலக்கல்வி அதிபருக்கு எழுதிய கடிதம், 21-06-79ல் 'ஈழநாடு' இதழில் 'நீதி வழங்குக' என்னுந் தலைப்பு ஆகியன மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் நிகழ்ந்த சம்பவத்தைச் சமன்செய்து சீர்தூக்கத் தூண்டியது. அதனல் அங்கே நிகழ்ந்தவற்றை உள்ளவாறு தர விரும்புகிறேன்.

மறவன்புலோ வள்ளக்குளம் வீரகத்தி விநாயகர் ஆலயம் செல்வச் சந்நிதி அறங்காவற் குழுச் செயலாளர் திரு க. சச்சிதானந்தனுல் சாதிப்பாகுபாடற்ற முறையில் எல்லோரும் சென்று வணங்க எப்பொழுதோ திறந்துவிடப் பட்ட கோயில் என்பதை யாவரும் அறிவர். சர்வதேச சிறுவர்தின நிகழ்ச்சியாக அக் கோவிலுக்கு வழிபாடு செய்ய ஓர் ஆசிரியை பிள்ளைகளைச் கூட்டிச்சென்ருர். எல்லோரையும் சென்று கும்பிடும்படி கூறிவிட்டு, பிள்ளைகளின் பாதுகாப்புக் கருதி ஆசிரியையும் சில பிள்ளைகளும் வாசலில் நின்றனர். அங்கே மாணவர் யாராவது கும்பிடவேண்டாம் எனத் தடுக்கவும் இல்லை; தடுக்கவேண்டிய அவசியமுமில்லை. பாடசாலைக்குச் சென்றதும் அதிபர், மற்றும் ஆசிரியர்களின் மேற்பார்வையில் அன்னதானமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதுதான் நிகழ்ச்சி.

கடந்த எட்டு ஆண்டுகளாக இப் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் சமூகசமய வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்கள் காட்டுமிராண்டிகளா? சிறுபான்மை என்னும் சொல்லுக்கு மறவன்புலோவில் அர்த்தத்தைக் கற்பித்த திரு. வண்ணை ஆனந்தன் பாடசாலையைநேரில் வந்து பார்த்தால், தானேதன் நிலைக்கு வருந்தக்கூடும்என்று அதிபர் மிகவும் விசனத்துடன் கூறினர்.

இம் முயற்சியின் பின்னணி எது என்பது தெரியாத புதிராக இருக்கிறது. இந்நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தவர் பெற்ருேருமல்லர்; பாடசாலையின் நலன் விரும்பியுமல்லர். இவர் தம்மைச் சார்ந்த பிள்ளைகளைக் கோவிலுக்குக் கூட்டிச் செல்லவேண்டாம் என 11-06-79ல் அதிபருக்கு ஒரு கடிதம் கொடுத்திருப்பதாகவும் அறிகிறேன். மாணவர்களை சமய வழிபாட்டில் ஈடுபடுத்தவேண்டுமென அரசாங்கமோ சமயச்சார்பு நிலையங்களோ வற்புறுத்தும் இவ்வேளையில் இக் கடிதம் வியப்பிற்கும் வேதனைக்குமுரியதாகும்.

இந்நிலையில் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் தீண்டாமை தொடர்பாகஎதுவித பேதமும் காட்டப்படவில்லை என்பதைத் தெட்டத்தெளிவாகக் கூறுகிறேன்.

நா. நாகராசா
(பெற்ருேர்)





சேர்கோப்பூர்

36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேருன அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2–3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான
BAYER
பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6.

melADS

# மன்னர் ஷாவை ஹெலிகொப்டரிலிருந்து சுட்டுக் கொலை செய்ய முயற்சி

மெக்ஸிக்கோ, ஜூன் 28

மெக்ஸிக்கோவில் தஞ்சம் புகுந்துள்ள முன்னுள் ஈரானிய மன்னர் ஷாவை ஹெலிகொப்டர் விமானத்திலிருந்து சுட்டுக்கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

நேற்று இனந்தெரியாத நபர்கள் ஷா தங்கியிருக்கும் மாளிகைக்கு மேல் ஹெலிகொப்டரில் தாளப் பறந்து இயந்திரத் துப்பாக்கியினால் மாளிகைமீது தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இத் தாக்குதலின்போது மன்னருடன் அரசியும் உறவினரும் உடனிருந்தனர். எவருக்கும் எதுவித காயமும் ஏற்படவில்லை.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்பின்னர் மன்னர் ஷா தமது மெய்ப்பாதுகாவலருடன் மாளிகை வளவில் நடமாடினாராம்.

## இன்று

[உடுப்பிட்டி]

நெல்லியடி இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் மணிவாசகர் குருபூசை விழா இன்று மாலை நெல்லியடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சைவப் புலவர் க. சி. குலரத்தினம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். [கு

## குருநாகலில்

குருநாகல் சைவ மகாசபையின் மணிவாசகர் விழா இன்று மாலை குருநாகல் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் நடைபெறுகிறது.

சிவஸ்ரீ எஸ். ஆர். சர்மாவின் சமயச் சொற்பொழிவும் சங்கீத வித்தகி செல்வி கமலா நடேசுவின் திருவாசக கச்சேரியும் இடம் பெறும். [கு]

# எண்ணெய் விலை 15 வீதம் அதிகரிப்பு

லண்டன், ஜூன் 28

எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் எண்ணெயின் விலையை மேலும் அதிகரிப்பதென்று தீர்மானித்துள்ளன.

'ஒபெக்' நிறுவனத்தைச் சேர்ந்த எண்ணெய்த்துறை அமைச்சர்களே மேற்கண்ட முடிவை எடுத்துள்ளனர்.

'ஒபெக்' நிறுவன அமைச்சர்கள் மகாநாட்டின் ... பத்தில் எண்ணெய் விலை அதிகரிப்புக் குறித்து அமைச்சர்களிடையே அபிப்பிராய... ஏற்பட்டிருந்த போதிலும் இறுதியில் ஒரு சமரச முடிவு காணப்பட்டது.

இந்த முடிவுக்கமைய எண்ணெயின் விலை உடனடியாக 15 வீதம் அதிகரிக்கப்படுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் மாதம்வரை புதிய விலைகள் அமுலிலிருக்கும் என்றும், செப்டம்பரில் இவ்விலைகள் மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் 'ஒபெக்' ஸ்தாபன அதிகாரி ஒருவர் கூறினர். [இ]

# இந்தியாவில் தடுப்புக்காவல் சட்டம்?

## மொரார்ஜி ஆதரவுக்கு இந்திரா கண்டனம்

புதுடில்லி ஜூன் 28

இந்தியாவில் தடுப்புக்காவல் சட்டத்தை மீண்டும் அமுல் செய்வதற்குப் பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் ஆதரவு தெரிவித்துள்ளதை முன்னுள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பலமாகக் கண்டித்துள்ளார்.

மக்களுக்கு பல வாக்குறுதிகளை அள்ளித்தே ஜனதாகட்சி ஆட்சிக்கு வந்தது. தடுப்புக் காவல் சட்டம் அமுல்செய்யப் படமாட்டாது என்பதும் வாக்குறுதிகளில்ஒன்றுகும். எனவே மீண்டும் அச்சட்டத்தைக் கொண்டுவருவது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்றும் திருமதி காந்தி தெரிவித்துள்ளார்.

### ஜோதிபாசு எதிர்ப்பு

தடுப்புக்காவல் சட்டம் அமுலுக்கு வரும்பட்சத்தில் உறுதியுடன் முழுதாக தாமெதிர்த்து நிற்கப்போவதாக மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதி பாசுவும் தெரிவித்துள்ளார். [இ]

## சிறுவர் பாடசாலை

(சங்கானை)

சிறுவர் ஆண்டையொட்டி இந்து இளைஞர் பேரவையின் சங்கானைக்கிளை சிறுவர் பாடசாலைக் கட்டிடம் ஒன்றை அமைத்துவருகின்றது.

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்த பாடசாலை இரண்டுமாதகாலத்தில் திறக்கப்படவுள்ளது. [கு

## சென்னையில் தடை உத்தரவு

சென்னை, ஜூன் 28

சென்னையில் மறியல், உண்ணாவிரதம் ஆகியவற்றை மேற்கொள்ள சில நிறுவனங்கள் முயற்சி மேற்கொள்வதை அடுத்து நகர் எங்கும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் 15நாட்களுக்கு கூட்டம், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் ஆகியவற்றுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது [இ]

## இலங்கை

## சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணி

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணி வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். ஆசீர்வாதப்பர் பாடசாலையில் திரு. க. மகேசன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாக உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர் திரு. ஜி. நல்லையா, உபதலைவர்கள்: திருவாளர்கள்: சி. பாலலிங்கம், சி. இ. குணரத்தினம், மு. சிவதாசன், இணைச்செயலாளர்கள்: திரு ம. செ. அலெக்சாந்தர், திரு. க. செல்லத்துரை, தனாதிகாரி: திரு. சி. நவரத்தினம், உப தனாதிகாரி திரு. சி. யேசுநாயகம், அமைப்பாளர் திரு இ. மாசிலாமணி

பதினொரு பேர் கொண்ட ஆலோசனைக்குழுவும், 46 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிராமங்கள் தோறும் முன்னணிக்கிளைகள் அமைப்பது பற்றியும் கூட்டத்தில் தீர்மா...


சாதாரண பெயருமல்ல
சாதாரண சுவையுமல்ல




விவா சாதாரண
மோல்டட் பாலுமல்ல

MASTERS

இறக்குமதியும் வினியோகமும்: db DARLEY BUTLER

நாகம்ஸ் [கன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்- பானுமதி
மதுரைவீரன்
(புதிய பிரதி)

வெஸ்லி
சாவிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சவுக்கடி
சந்திரகாந்தா

## திருமுறை பஜனை

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு கண்ணகை அம்பாள் கோவிலில் நேற்று முன் தினம் நடைபெற்ற மகா கும்பாபிஷேக விழாவில் யாழ் திருமுறை மன்றப் பஜனைக் குழுவினரின் திருமுறைபஜனை விசேஷமாக இடம்பெற்றது. (ஆ)

Rio Phone: 7607
Daily 10-30,
Jaffna) 4-45, 7-00 &
9-30 p.m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.

கொட்டகை நிறைந்த 3-வது வாரம்
REGAL Daily at 2-00 4-30, 7-00
& 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

வெலிங்டன் தினசரி; 10-30, 2-30, 6-30, & 9-45.
[யாழ்ப்பாணம்]
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர்)
கப்பலோட்டிய தமிழன்

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(காங்கேசன்) சிவகுமார்
நடித்த
கண்மணி ராஜா
(புத்தம்புதிய பிரதி)
30-6-79 முதல் பணம்

கடைசி வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-4
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
[புதிய பிரதி]

ராஜா 76-வது நாள் தினசரி 4 காட்சிகள்
யாழ் நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

27-வது வாரம்
வின்சர் போன்: 466
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வாரம்
ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

SHANTHI A GRAND RELEASE!
JAFFNA Daily: 5 Shows
(Phone 7642) 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
Everything seemed so important then
...Even Love!
STREISAND & REDFORD together!
The Way We Were
— Color —
Winner of 2 Academy Awards
Coming! "MR. MAJESTYK" Adults only—Color
Dont miss this Action Packed Movie.

# இன்றைய பலன்

ஆனிமாதம் 15-ம் திகதி

[வெள்ளிக்கிழமை]

(29-6-1979)

மேடம்: புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும், ஏழைகளுக்கு இரங்குவதில் முன் நிற்பீர்கள், தெய்வ குருபக்திக்கும் இடமுண்டு, மற்றவர்கள் உங்களைப் பின்பற்றக்கூடிய சூழ்நிலை உருவாகும், நல்லநாள்.

இடபம்: பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழிகோலப்படும், சிலருக்கு புதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும், வருவாயும் வளரும்.

மிதுனம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது, நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும், கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும், சுபதினம்.

கடகம்: கழுகுப்பார்வை வட்டமிடும், காத்திருப்பர் பகைவர், நிதிநெருக்கடியைத் தவிர்க்க மதிவழிநில்.

சிங்கம்: எவ்விடத்திலும் நன்றாக ஆலோசித்தபின்பே முடிவெடுக்கவும், ஆணவப் போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும், முகமன் கூறுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

கன்னி: போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள், எதிலும் நிறைவு தென்படும், முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டும், குடும்பத்திலும் அன்பு தவழும்.

துலாம்: உணர்ச்சிமயமான தினம், மனப்போராட்டங்கள் நடைபெறும், உடல் நலமும் பாதிக்கப்படலாம், குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

விருச்சிகம்: ஒளிபரப்பும் வாழ்க்கை, உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும்; எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம், பொன்னான தினம்.

தனுசு: கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும், தாய் வழிச் செய்தியும் கிடைக்கும், கவிஞர்கள் ஆதரவு தருவர், தொழில்புரியும் இடத்தில் செல்வாக்கும் பெருகும்.

மகரம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவுபார்க்கப்படும், தொழில் துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம், அகால போசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்படலாம்.

கும்பம்: தொல்லைகள் அலைமோதும், மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள் குடும்பத்திலும் சிறு பிணிக்கு இடமேற்படலாம், வைத்தியச் செலவுகளுக்காகப் பணம் விரயமாகலாம், நண்பர்களை நம்பவேண்டாம், மதுபானத்தைத் தவிர்க்கவும்.

மீனம்: நாள் எல்லாம் அலைச்சல், உடல் மெலிவு தோன்றும், பிணிக்கு இடங்கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## குடியியல் சட்டக்கோவையின் 16-ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

1. நாகமணி பசுபதிப்பிள்ளை இராஜையா
2. பேரம்பலம் கணபதிப்பிள்ளை
3. முத்தையா குமாரசாமி
4. கந்தையா துரைராசா
5. வேலுப்பிள்ளை சண்முகம் இராசரத்தினம் எல்லோரும் அனலைதீவு

தங்கள் சார்பிலும் அனலைதீவு ஐயனார் கோவிலின் வருடாந்த தேர் தீர்த்த திருவிழாக்கள் நடத்தும் குடும்ப அங்கத்தவர்கள் சார்பிலும்

வழக்காளிகள்

வழக்கு இல. ந: செ. 29

எதிராக

1. வேலுப்பிள்ளை குமாரசாமி தலைவர்
2. செல்லப்பா சிவரத்தினம், காரியதரிசி
3. கந்தையா மார்க்கண்டு உபகாரியதரிசி
4. வேலாயுதர் நடராசா, தனாதிகாரி
5. சுப்பிரமணியம் நாகலிங்கம், மனேஜர்
6. தம்பு இளையதம்பி நிர்வாக சபை அங்கத்தவர்
7. வேலாயுதர் சபாபதி, நிர்வாகசபை அங்கத்தவர்
8. சோமசுந்தரம் நடராசா, நிர்வாகசபை அங்கத்தவர்
9. இளையதம்பி கதிரவேலு, நிர்வாகசபை அங்கத்தவர்
10. சின்னத்தம்பி இரத்தினசிங்கம், நிர்வாக சபை அங்கத்தவர்
11. குழந்தைவேலு கணேசு நிர்வாகசபை அங்கத்தவர்
12. சின்னப்பு சிவகுரு, நிர்வாகசபை அங்கத்தவர்
13. பிள்ளையினர் சுந்தரம், நிர்வாகசபை அங்கத்தவர்
14. சுப்பையா சோமசுந்தரம், நிர்வகசபை அங்கத்தவர்
15. வைத்தியநாதி பரமலிங்கம், நிர்வாகசபை அங்கத்தவர் அனலைதீவு ஐயனார்கோவில் பரிபாலனசபை

எதிராளிகள்

மேற்குறித்த வழக்காளிகள் தங்கள் சார்பிலும் அனலைதீவு ஐயனார் கோவில் வருடாந்த தேர் தீர்த்தத் திருவிழாக்கள் நடத்தும் குடும்ப அங்கத்தவர்கள் சார்பிலும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கை குறித்த எதிராளிகளுக்கு எதிராக கீழ்க்காணும் நிவாரணங்களை பெறுவதற்கு ஒரு வழக்கைத் தொடருவதற்கு உத்தரவு கோரியுள்ளார்கள்.

### நிவாரணங்கள்

1. குறித்த வழக்காளிகளே சமயாசாரப்படியும் சட்டப்படியும் குறித்த கோவிலின் தேர் தீர்த்தத் திருவிழாக்களை நடாத்தும் உரிமையுடையவர்கள் என்று பிரகடனப்படுத்தவும்.

2. 7-8-79ல் நடக்கவிருக்கும் தேர் தீர்த்தத் திருவிழாக்களை வழக்காளிகள் நடத்துவதற்கு எந்தவித தடையையோ இடையூறையோ எதிராளிகளோ அல்லது அவர்கள் முகவர்களோ அல்லது அவர்களின் இடத்திற்கு வருபவர்களோ செய்யக்கூடாதென ஒரு நிரந்தரத் தடைக் கட்டளைக்கும்

3. 7-8-79ல் சமயாசாரப்படி நடக்கவிருக்கும் தேர் தீர்த்தத் திருவிழாக்களை வழக்காளிகள் நடாத்துவதை எதிராளிகளோ அல்லது அவர்களின் முகவர்களோ அல்லது அவர்களின் இடாதிற்கு வருபவர்களோ எவ்வித தடையோ இடையூறோ விளைவிக்கா வண்ணம் இவ்வழக்கு விளங்கி முடியும்வரை ஓர் இடைக்காலத் தடைக்கட்டளைக்கும்

ஆகவே மேற்குறித்த வழக்கில் அக்கறையுள்ளவர்கள் யாபேருக்கும் இந்த வழக்கு தாக்கல் செய்து தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதென்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 27-ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்,

## சித்தன்கேணியில் நாளை தேர்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய ரதோற்சவம் சனிக்கிழமை காலை 8மணிக்கு நடைபெறுகிறது

இன்று சப்பரத்திருவிழாவும் நாளை மறுதினம் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## மயிலப்புலம் ஐயனார் திருவிழா

[தெல்லிப்பழை]

கட்டுவன் மயிலப்புலம் ஐயனார் கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 16ந் திகதி ஆரம்பமாகி 9 தினங்கள் நடைபெற்றன உற்சவதினங்களில் கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுகள் இடம் பெற்றன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வைரவர் பொங்கல் நடைபெறும்.

(அ)

## கேள்வி விளம்பரம்

### பனங்காமம் கிராமாட்சிமன்றம்

கீழ்க்காணும் வேலைகளுக்கு ரூபா 5000/-க்கு மேற்பட்ட பதிவுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன கேள்விப்பத்திரம் யாவும் 5-07-1979ம் திகதி காலை 10-00 வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/- (பத்து) ஒவ்வொரு கேள்விப் பத்திரப் பணம் அறவிடப்படும். அத்துடன் கேள்விப் பணம் ரூபா 25/- (இருபத்தி ஐந்து) கட்டியதின்பேரில் கிராமசபை அலுவலகத்தில் உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் 3-07-1979ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கேள்விப்பத்திரப்பிரதி ஒன்று எமக்குக்கிடைக்கும் அதே நேரத்தில், வவனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்க்கு கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும் கடிதங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பிணைப் பத்திரப்பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரத்துடன் இணைத்திருக்கவேண்டும்.

இதுவிடயமான மேலதிக விபரங்கள் எதுவும் தேவைப்படுமிடத்து பனங்காமம் கிராமாட்சிமன்ற விசேட ஆணையாளரிடமிருந்தும் வவனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைகள் விபரம்:

(1) பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் ரோட்டு வேலை.

(2) நட்டாங்கண்டல் மடம் திருத்தல் வேலை.

(3) பாண்டியன் குளத்தில் திறந்தவெளி அரங்கு அமைத்தல்.

(ஒப்பம்)

க. குலேந்திரா

விசேட ஆணையாளர்

பனங்காமம் கிராமப்பிரதேசம்

பாண்டியன்குளம்,

வவுனிக்குளம்.

பனங்காமம்

கிராமாட்சிமன்றம்,

பாண்டியன்குளம்,

வவுனிக்குளம்.

21-06-1979 2900

# இலங்கை ரயில் கட்டணமே உலகில் மிகவும் குறைவு

## பொது முகாமையாளர் கூறுகிறார்

[கொழும்பு]

நாடுமுழுவதிலும் உள்ள ரயில்பாதைகள் நல்ல நிலையில் இல்லாத காரணத்தினால் ரயில்களை உரியகாலத்தில் ஓடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் திரு. எம். ஏ. ஏ. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சேவையில் ஈடுபடும் ரயில்கள் சற்றுத் தாமதமானால் தாமதத்தினால் இழந்த நேரத்தை நிவர்த்திசெய்ய பாதைகள் நல்லநிலையில் இல்லாத காரணத்தினால் ரயில்களை வேகமாக ஓடமுடியாமலிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

ரயில்பாதைகளைச் சீர்செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் விரைவில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது.

### ரயில் கட்டண உயர்வு

உலகநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்கை ரயில்கட்டணங்கள் மிகவும் குறைவாக உள்ளது என்றும் கூறிய அவர் ரயில்கட்டணங்களை அதிகரிப்பது குறித்து தம்மால் எதுவும் கூறமுடியாது என்றும் தெரிவித்தார். [இ]

# இன்று திரு இருதயக் கல்லூரியின் 65வது ஆண்டு விழா

வடமராட்சியில் பிரபல கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் கரவெட்டி திருஇருதயக்கல்லூரியின் 65வது ஆண்டுவிழா இன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

1914ம் ஆண்டு பருத்தித்துறை கரவெட்டிப் பங்குக்கத்தோலிக்க பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்கு ஒரு கல்விக்கூடமில்லை என்பதை உணர்ந்த அமலஉற்பவச் சபைக்குரவர் வண. பிதா. எச். பெருசல் அடிகளாரால் இக்கல்லூரி உருவாக்கப்பட்டது. கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய மூப்பராயிருந்த திரு. அந்தோனிப்பிள்ளையால் இக்கல்லூரியை நிறுவுவதற்கென நன்கொடையாகக் காணிவழங்கப்பட்டது.

வண. பிதா. இம்மனுவல் அடிகளாரை முதலாவது அதிபராகக் கொண்டுஆரம்பமான இக்கல்லூரி கத்தோலிக்கப் பிள்ளைகளின் கல்விநிலையமாகத் திகழத்தொடங்கியது.

கல்லூரிக்குப் பிள்ளைகள் தொகை அதிகரிக்கத் தொடங்கவே இடம்பற்றாக்குறை ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து அதிபர் வண. பிதா. பெஞ்சமின் அடிகளாரின் முயற்சியினால் வேறொரு காணி வாங்கப்பட்டுப் புதிய வகுப்பறைகளும் மண்டபமும் நிறுவப்பட்டன. 1928ம் ஆண்டு முன்னேற்றம் பெற்ற கல்லூரியாக இது விளங்கத் தொடங்கியது. அப்போதைய யாழ்.மேற்றிராணியார் சங். சூசையப்பர் துறவிகளின் அயரா உழைப்பாலும், சேவையாலும் கல்லூரி முன்னேறத் தொடங்கியது.

இக்கல்லூரிக்கு விஞ்ஞான ஆய்வுகூடமொன்று தேவையாயிருப்பதன் அவசியத்தை நன்குணர்ந்த அதிபர் சங். சகோதரர் பீ. பாக்கியநாதர் விஞ்ஞான ஆய்வுகூடமொன்றையும் நிறுவினார்.

இதன்பின்னர் விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கவென ஆசிரியராக நியமனம் செய்யப்பட்ட திரு. தோமஸ் ஈப்பன் இக்கல்லூரியின் அதிபராகத் திகழுகின்றார்.

இவர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் காரணமாக இன்றுஇக்கல்லூரிவடமராட்சியில்முதன்மை பெற்று விளங்குவதுடன் கல்வியமைச்சின் பாராட்டுதல்களையும் பெற்று விளங்குகின்றது.

இக் கல்லூரியில் நிரந்தர விளையாட்டு மைதானமொன்று இல்லாதபோதிலும் பல வட்டார, மாவட்ட ரீதியிலான போட்டிகளில் முதல் ஸ்தானங்களைப் பெற்றுச் சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும் இதர கல்லூரிகளுக்கு முன்மாதிரியாக விளங்கும் கரவெட்டி திருஇருதயக் கல்லூரி இன்று 65வது ஆண்டு விழா வைக் கொண்டாடுவது கல்வி யுலகில் ஒரு சாதனையாகும்.

—எம். சுபேந்திரன்

# 1வது ஆண்டுப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தொகுதி பேருந்து பிரயாணிகள் சங்க முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் ஜூலை மாதம் 2ம் திகதி முற்பகல் சங்க உபதலைவர் எஸ். பி. தவரத்தினம் தலைமையில் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெறும். (இ)

# சிறுமி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

இதேசமயம், அக்கா கடத்திச் செல்லப்பட்டதை தம்பி ஓடோடி வீட்டிற்குச் சென்று அறிவித்ததாகவும், வீட்டுக்காரர்களும் அயலவர்களும், தேடுதல் வேட்டையில் இறங்கியதாகவும் கூறப்படுகிறது.

தட்டாதெருச் சந்திக்கருகில் சிறுமியை கண்டுபிடித்த பெற்றோர் இதுபற்றிப் பொலிஸிற்கு புகார் செய்துள்ளனர். பொலிசார் இச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர. [கொ]

# தமிழ்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

## அமிர் கோட்டைக்குள் போயிருந்தால் விளைவு...

திரு. அமிர்தலிங்கம் சிறையிலிருந்து விடுதலையான இளைஞர்களை வரவேற்க கோட்டை சிறைச்சாலைக்குச் சென்றார். அவர் இவ்வாறு சிறைச்சாலைக்குப் போனது அதுவே முதல் தடவையாகும். அனுமதியின்றி கோட்டைக்குள் செல்ல முடியாத போது அவர் கோட்டை சிறைச்சாலைக்கு காரில் போக முயன்றார்.

கோட்டை சிறையினுள் தடுத்தும் அவர் போகமுயன்றார். அப்படி அவர் போயிருந்தால் விளைவுகள் வேறுவிதமாக இருந்திருக்கும்.

அச்சம்பவத்தில் திரு. அமிர்தலிங்கம் தன்னைப் பொலிசார் ஒருவர் தாக்கியதாக கூறியபோதும அவருடன் இருந்த திரு. தர்மலிங்கம் எம். பி. தாம் அதைப்பார்த்ததாகக் கூறவில்லை.

தனிப்பட்ட முறையில் சில பொலிசார் யாரும் செய்யும் தவறுகளுக்கு உயரதிகாரிகளின் ஆதரவோ சம்மதமோ கிடையாதென்று நான் உறுதியாகச் சொல்லுவேன். (கு-இ)

# தமிழ் இனத்தையும், மொழியையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு நான் அரசுடன் சேரவில்லை

## அமைச்சர் 'இராசு' பதில்

[செங்கலடி]

தமிழ்ப்பேசும் இனத்தையும், தமிழ்மொழி உரிமைகளையும் மறந்து அவற்றைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு நான் அரசுடன் சேரவில்லை. தமிழ் மொழிக்கு அரசியல் சாஸனத்தில் உரிய இடமளித்து, அதை வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் ஆட்சி மொழியாக- நிருவாக மொழியாக ஆக்கி அதற்கு உரிய, உயரிய இடமளித்து இந்த நாட்டின் தேசிய மொழி அந்தஸ்து வழங்கிய ஒரு அரசாங்கத்துடனேயே இணைந்துள்ளேன்.

இவ்வாறு ஏறுவூர் ஐயங்கேணி மாதர் முன்னேற்றச் சங்கத்தின் மட்பாண்ட நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் மொழி அமுலாக்க பிராந்திய அபிவிருத்திக்கு அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை கூறினார்.

ஏறுவூர்ப்பற்று உதவி அரசாங்க அதிபர் திரு. இ. மோன குருசாமி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினமும் கலந்து கொண்டார்.

திரு. இராசதுரை தமது உரையில் தொடர்ந்து கூறியதாவது,

நான் இன்று அரசுடன் சேர்ந்துள்ளதன் காரணம் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள எமது தமிழ் பிரதேசம் அபிவிருத்தியடைய வேண்டும் என்ற நல்லெண்ணமேயாகும் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கையை வியக்கத்தக்க அபிவிருத்தி செய்வதுடன் தமிழினத்தின் பல பிரச்னைகளுக்கும் இந்த அரசின் மூலம் தீர்வுகாண்பேன்.

எனது அமைச்சு பயனற்றது என்றும் அதற்கென நிதியும் ஒதுக்கப்படவில்லை என்றும் அண்மையில் மட்டக்களப்பிற்கு வந்த எனது பழைய நண்பர்கள் சிலர் கூறினார்கள். இவ்வாறு இவர்கள் கூறியதற்கு அடுத்த வாரமே 300 லட்சம் ரூபாவை வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்தேன். இப்போது எனது அமைச்சின் நிலைமையை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என நம்புகின்றேன்.

தமிழ் மொழி உபயோகம், அமுலாக்கல் பற்றி கடந்த இரு மாதகாலத்துக்குள் ஜனாதிபதியும், பிரதமரும் என்னை அழைத்து 3 கூட்டங்களை நடாத்தியுள்ளார். அக்கூட்டங்களில் அரசியல் சாஸனத்தின் மூலம் தமிழ்மொழியை இந்நாட்டில் அமுல் நடத்தும் பொறுப்பை ஜனாதிபதி என்னிடம் ஒப்படைத்துள்ளார்

மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினம் தமதுரையில் கூறியதாவது:-

திரு இராசதுரை தமது அமைச்சின் மூலம் பின் தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்கு 16 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இவ்வபிவிருத்தி திட்டத்தின் முதல் கட்டமாக 230 வீடுகள் கன்னங்குடா புரத்தில் நிர்மாணிக்கப்படும். (கா-இ)

# யாழ். டாக்டர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சந்தேகநபர் திரு சந்தியா செபஸ்தியன் பிரான்சிஸ் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு அறிவிக்கப்படும் நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியவகையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"பீனல்கோட் இல 344 பிரிவின்கீழ் திரு சந்தியா செபஸ்தியன் பிரான்சிஸ்மீது வழக்குத் தாக்கல்செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### வைத்திய அத்தியட்சகர் கடிதம்

இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் யாழ் பொலிஸ் அத்தியட்சகருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"தங்களின் கடிதம் (இல, ஆர் 1423/79) இன்று காலை 9-55க்கு கிடைத்தது. மிக்க நன்றி,

"தங்களால் உடனடியாக மேற்கொள்ளப்பட்ட உரிய நடவடிக்கை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்,

"தங்களின் கடிதத்தை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு (கிளைச்சங்கத்துக்கு) சமர்ப்பிக்கின்றேன், இதன்மூலம், மேற்கொண்டு தாமதமில்லாமல் அவர்கள் வழக்கமான வேலைக்குத்திரும்ப முடியும் என்று கருதுகின்றேன்."

### தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் கடிதம்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகருக்கு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ஆர். சி. என். குணசிங்கா அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

"யாழ்ப்பாணம் பெரியாஸ் பத்திரியிலுள்ள பொலிஸ் பிரிவினர்;

"யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்கள் இன்று வேலை நிறுத்தம் செய்து, பின்னர் வேலையை மீண்டும் தொடங்கியதாக எனக்கு அறிவித்துள்ளனர் இந்த விபரம் சரியானதென்றால், தயவு செய்து பின்வரும் விஷயங்கள் குறித்து எனக்கு உடனடியாக அறிவிக்கவும்."

(1) அவர்கள் எத்தனை மணிக்கு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்?

(2) அவர்கள் எத்தனை மணிக்கு வேலைக்கு மீண்டும் சென்றார்கள்? இக்கடிதம் கொண்டுவரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சேனாதிராஜா மூலமாக உடனடியாகப் பதிலையும் நீங்கள் அனுப்பிவைத்தீர்களானால் மிகவும் உதவியாகவிருக்கும்."

### பதில் வைத்திய அத்தியட்சகர் கடிதம்

இக்கடிதத்துக்கு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டபிள்யூ. ஜெயநாதன், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டருக்கு அனுப்பிய பதிலில் தெரிவித்திருப்பதாவது:-

"26-6-79ல் யாழ். ஆஸ்பத்திரியில் நடந்த சம்பவம் தொடர்பாக, பொலிஸார் தங்களது கடமையைச் சரிவரச் செய்யத் தவறினால், 27-6-79ல் வேலை நிறுத்தம் செய்வதென்று யாழ். பெரியாஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் பயமுறுத்தியிருந்தனர்.

"ஆனால், பொலிஸ் அத்தியட்சகரும், அவரது அதிகாரிகளும் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, தங்களது பயமுறுத்தலை வாபஸ் பெற்றுக்கொண்ட வைத்திய அதிகாரிகள், வழக்கமான வேலையைத் தொடங்கினர்."

# பசளைப்பனைஓலை சொக்கப் பனையானது!

[வேலணை]

பசளைக்குப் பயன்படுத்தவிருந்த பனைஓலைக்கட்டுகளை சொக்கப்பனை கொளுத்தி ரசித்தாராம் ஓர் அநாமதேயப் பேர்வழி! வேலணை கிழக்கில் இருக்கும் நவக்கை குளத்துக்குப் பக்கத்திலிருக்கும் இ. க. தியாகராசா என்பவருக்குச் சொந்தமான தோட்டத்தில் பசளையாக உபயோகப்படுத்த இருந்த பெருந் தொகைப் பணம் பெறுமதியான பனை ஓலைக்கட்டுகளை சென்ற 25ம் தேதி இரவு யாரோ ஒருவர் தீ வைத்துக் கொளுத்திவிட்டார். அந்த அக்கினிச் சுவாலை சுமார் இரண்டு மணி நேரம் நீடித்து அக்கிராமத்தவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

# தாதிமார்சங்கம் மட்டக்களப்பில் நாளை கூடுகிறது

(மட்டக்களப்பு)

இலங்கை பொது தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள்தின கருத்தரங்கொன்று இன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனையில் நடைபெறவுள்ளது

திருக்குறள் முன்னணிக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கிற்கு, முன்னை நாள் பேராசிரியர் திரு. கு. நேசையா தலைமை தாங்குவார்.

# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண். கிழக்கு கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சாந்திக மஹோற்சவ பூர்த்தி, தேவி பூஜை இன்று நடைபெறுகிறது நண்பகல் பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் 4-30க்கும் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று, மாலை ஆறு மணிக்கு அம்பாள் பூஜை நடைபெறும்.

# ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கல்வி வட்டாரப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (அ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 29ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanadu P B No: 49, Telegrams: Eelanadu